# உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவமும் பால்நிலைச் சமத்துவம் பற்றிய பிரதிபலிப்பும்: ஓர் ஒப்பீட்டு ஆய்வு

**Inparajah Nirojan***


**ஆய்வுச் சுருக்கம்**

உள்ளூராட்சி மன்றங்கள் அரசியல் நிறுவனத்தின் ஆரம்ப கட்டமைப்பாக நோக்கப்படுகின்றது. எனினும் அவற்றின் சமூக, அரசியல், பொருளாதார முக்கியத்துவம் புறக்கணிக்கத்தக்கதன்று. பெண்கள் தமது அரசியலில் தம்மை நிலைநிறுத்துவதற்கு முதற்படியாக இந்த உள்ளூராட்சி மன்றங்கள் அமைகின்றன. அத்துடன் பல்வேறுபட்ட அபிவிருத்திச் செயன்முறையில் பால்நிலை சமத்துவத்தை உறுதிப்படுத்தவும் துணை புரிகின்றது. இதன்படி உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவ நிலையை தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் திரட்டப்பட்ட தரவுகளைக் கொண்டு பகுப்பாய்வு செய்வதனூடாக இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. தரவுசேகரித்தல் முறைகளாக நேர்காணல், வினாக்கொத்து, பங்குபற்றல் போன்ற முறைகளும் பயன்படுத்தப்பட்டன. அதேவேளை இவ்வாய்வில் அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வு நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் மாநகரசபைகள், நகர சனைகள், பிரதேச சபைகள் என்பவற்றிலிருந்து ஆலோசனைக் குழுக்களில் பெண்களின் பிரதிநிதித்துவம், தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் வாக்காளர் பிரதிநிதிகள் என்பனவும் பிரதேச செயலகத்திலிருந்து மத்தியஸ்த சபைகளில் பெண்கள் பிரதிநிதித்துவம் என்ற ரீதியில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தரவுகள் திரட்டப்பட்டன. இவற்றில் பெண்ணிலைச் சிந்தனையாளர்களின் கருத்துக்களை உள்ளடக்கிய ஆழமான நேர்காணலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. பெண்களின் பங்களிப்பும் சமூக அபிவிருத்தியில் அவசியமாகக் காணப்படுகின்ற நிலையில் அவர்களையும் இணைத்துக் கொண்டு அபிவிருத்திப் பாதையில் பயணிப்பதானது நாட்டின் அபிவிருத்திக்கு உகந்த சூழலை ஏற்படுத்தும். பெண்கள் எல்லாவிதமான துறைகளிலும் முன்னேற்றமடைந்து வந்தாலும் ஒரு சமூகத்திலும் சரி, நாட்டிலும் சரி தடைகளை ஏற்படுத்த பலர் முனைவதுண்டு. ஒரு வீட்டினைப் பொறுத்தவரையில் கணவர் தடைகளை ஏற்படுத்தலாம், நாடு என்ற ரீதியில் தீர்மானம் எடுப்பவர்கள் இதனைத் தடுக்கலாம். இவ்வகையில் தற்போதய தற்போது உள்ளூராட்சி மன்றங்களில் ஆண்களுடன் ஒப்பிடுகின்ற போது தீர்மானம்மிக்க துறைகளில் பெண்களின் பங்குபற்றல் எவ்வாறுள்ளது என்பதனை இவ்வாய்வின் மூலம் அறியமுடிகின்றது.


**பிரதான சொற்கள்:** சமூக இயக்கம், சமூக அபிவிருத்தி, பெண்கள் வலுப்படுத்தல்


To whom correspondence should be addressed: niroshniroshan@gmail.com

*Divisional Child Protection Officer, Divisional Secretariat, Manmunai North, Batticaloa.